Tsi9T

தென்காசி மாவட்டம்

மூன்றாம் இடைப்பருவத் தேர்வு - 2024

04.03.2024

-----

வகுப்பு 9

காலஅளவு: 1.30 மணிநேரம் **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8×1=8**

1) இமயத்துக் கோடு உயர்ந்தனன் - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு

2) முண்டி மோதும் துணிவே இன்பம் - இவ்வடியில் உருவகிக்கப்படுவது

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

3) யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

4) ஞானம் என்பதன் பொருள் யாது?

அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

5) வண்ணதாசனுக்கு சாகித்ய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல்.

அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின்

இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

**பாடலைப் படித்து விடை தருக.**

நசை பெரிது உடையர் நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர் சென்ற ஆறே

6) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

அ) யசோதர காவியம் ஆ) குறுந்தொகை

இ) ஒரு சிறு இசை ஈ) ஒளியின் அழைப்பு

7) பிடி - என்பதன் பொருள்

அ) ஒரு வகை மரம் ஆ) ஆண் யானை இ) பெண் யானை ஈ) விரதம்

8) **விடைக்கேற்ற வினாவைத் தேர்க.**

விடை - பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.

அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?

ஆ) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?

இ) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது?

ஈ) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**ஆ) எவையேனும் ஆறனுக்கு விடை தருக.** **6×2=12**

9) பகுத்தறிவு என்றால் என்ன?

10) கமுகு மரம் எதைத் தேடியது?

11) அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

12) தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையச் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?

13) நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன். இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.

14) **கலைச்சொல் தருக.** 1. Perosonolity 2. Font

15) சொற்றொடர் உருவாக்குக. செந்தமிழும் சுவையும் போல

16) அலறும் மயிலும் கூவும் ஆந்தையும் அகவும் சேவலும் போன்ற இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும். (ஒலி மரபுப் பிழைகளைத் திருத்துக)

**இ) எவையேனும் நான்கனுக்கு விடை தருக.(வி.எண்: 17 கட்டாய வினா)** **4×3=12**

17) அ) 'சைக்கிளில் வந்து - எனத் தொடங்கும் அக்கறை கவிதை.

ஆ) 'ஆக்குவது - எனத் தொடங்கும் யசோதர காவியப் பாடல்

18) நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?

19) 'பழங்களை விடவும் நசுங்கிப் போனது' - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

20) கோர்டன் ஆல்போர்ட் குறிப்பிடும் மூன்று இலக்கணங்களை குறிப்பிடுக.

21) 'யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக?

**ஈ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **2×5=10**

22) அ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கமுகு மரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

23) அ) **காட்சியைக்கண்டு கவினுற எழுதுக.**



**உ) விரிவான விடையளிக்க.** **1×8=8**

24) அ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

**(அல்லது)**

ஆ) மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com